# பொங்கல் வாழ்த்து!

வையகம் போற்ற வாழ்ந்து,
வளமெலாம் பெற்ற பின்னும்;
பொய்யகம் காணா மாந்தர்,
பொலிவுடன் கண்ட நந்நாள்!
'தை'யவள் பிறக்கும் நாளில்,
தகைவுடன் பூசை செய்து;
மெய்யென நிலவும் இயற்கை;
மேவிட நன்றி சொல்வார்!

நன்றியை வாழ்வின் கோளாய்,
நட்புடன் கொண்டதாலே,
பின்வரும் நாளில் தமக்குப்
பெரும்பணி செய்த இனத்தை;
பொன்னெனக் காத்து நலமாய்,
பூசையும் செய்து மகிழ்வர்!
தன்னெனப் போற்றும் மரபை,
தகைவுடன் வளர்த்து வாழ்வோம்!
13-01-2004

## பொங்கல் வாழ்த்து!

பொங்கல் என்பது உணவைச் சொல்லும் உன்னதச் சொல்லோ!
பொங்கிடும் வாழ்வியல் கண்டு நிறைந்த தன்னிகர் நிலையோ!
எங்கும் நிறைந்த இயற்கைக் கலந்த இயன்நிலை வாழ்வோ!
சிங்கத்தமிழர் கண்டச் சீர்மிகு வாழ்வியல் சொல்லும் நெறியோ!
பங்கமில் நேயம் பாங்குடன் சொன்ன வாழ்வியல் முறையோ!
பொங்கிடும் அந்தப் புத்தரிசி காட்டியச் சீர்வடிவின் எழிலோ!
மங்காப்புகழ் சீர் தமிழன் வாழ்வியல் கண்ட நன்றிப் பெருக்கோ!
தங்கும் உயிர்க்கு உணவைப் படைக்கும் உழவனின் மகிழ்வோ!

எங்கும் நிறைந்த இறைவடிவாக,

இயற்கையில் இயைந்த,

வாழ்வைப் பேணும் சீராய்ந்த தமிழர் கண்ட,

பொங்கல் நாளில் புகலுவேன் வாழ்த்து!

- அன்புடன்,

கவிஞர் கவிவளவன் (15-01-2020)



## தமிழன் வாழ்வு!





தெள்ளிய தமிழர் வாழ்வில்,
திகழ்ந்த பலபெருமை யுண்டு!
துள்ளுமோர் அறிவின் கொற்றம்,
தூயநல் அறிவின் மாட்சி!
அள்ளவும் குறையா நீராய்,
ஆன்றநல் வாழ்வின் தேடல்!
கிள்ளையாய் இயற்கை யோடு,
கீர்த்தி கொண்டோம் தாமே!

தொல்லையில் வாழ்வைத் தொடர,
துணைநின்ற வாழ்வியல் நியதி!
எல்லையில் பரம்பொருள் தன்னை,
இயல்பிலே கண்டோம் நாமே!
மல்லையின் சிற்பம் போலே,
மருவிலாது பலவும் செய்தோம்!
சொல்லில் உயர்ச்சொல் தமிழேயென்று,
சொல்லிய வாக்கு தவறேயன்று!

வேறு –

நீரையும் போற்றினான், நெருப்பையும் போற்றினான்,
சீராய் வாழ்வியல் சிந்தையுடன் செய்திட்டான்!
இருளைக் கண்ணனாய், எழுந்த ஒளியை முருகனாய்,
மருவிலாச் சீற்றமே மாதவள் கொற்றவையாக!

சீருரும் நல்லவையோடு சேர்ந்த்து வாழ்ந்திருந்தான்!
பாரினில் அறிவைச் செய்து, சிவனெனும் சித்தனானான்!
கோளும் மீனும் கண்டே குவலயத்தில் யாவும் செய்தான்!
ஆளும் அறிவில் அவனே அறிவியல் வாழ்வைக் கொண்டான்!
மீளாது விடுவோமோ? அப்பெருநிலையை மீண்டும்?

அனைவருக்கும் **இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!**
அன்புடன்,
**கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்**
12-01-2022

## பொங்கல் வாழ்த்து!



பொங்கும் வகையால் பொங்கல் ஆனது!
பொங்கிடும் நிலையால் இன்பம் ஆனது!
தங்கிடும் வாழ்வியல் மகிழ்வும் ஆனது!

அங்கமாய் வேளாண் வாழ்வியல் சொன்னது!
எங்குமே நிறைவாய் நன்றியைச் சொன்னது!
சிங்கத்தமிழரின் நெறிமுறைச் சொன்னது!

மங்கா அறிவின் மகத்துவம் சொல்வது!
தங்கக் கதிரோன் வடதிசைக் கொள்வதாய்!
எங்கள் அறிவே இயன்நிலை ஆள்வதாம்!

பொங்கும் கதிரின் புனைவில் மாதங்கள்!
சிங்கத் தமிழன் அறிவின் நடைமுறை!
எங்கும் உலகில் சந்திரன் வழியதாம்!

தங்கத் தமிழனின் தகைமையைக் காப்போம்!
அங்கமாய் உயிர்களை அணைத்தே வாழ்வோம்!
பொங்குக! புலம் பெயர்ந் தொர்க்கும் வாழ்த்து!

அன்புடன்,
**கவிவளவன்** ஆகிய
**கு.ப. அசோகன்.**
13-01-2021





# பொங்கல் வாழ்த்து! 2018

அறுவடைத் திருநாள் என்றே,
அவனியோர் போற்றும் நாளாம்!
உறும்திசை வடக்கே யாகும்,
உயரிய நாளாம் இன்று!
பெருமைகொள் தமிழர் தாமே,
கதிரியக்கம் கண்டு பிடித்தே,
அருமைகொள் கால அளவை,
அழகுடன் கணித்தே வைத்தார்!

சித்திரை ஒன்றும் கூட
சீரிய அறிவே யாகும்!
முத்திரைத் தமிழர் வாழ்வின்
முடிவிலாக் கீர்த்தி எங்கே?
இத்தரை மீதில் தாமே,
இயங்கிய அறிவின் சுடராம்!
எத்திசைச் சென்ற தென்றே,
இரந்தே யானும் கேட்பேன்!

மரபியல் கண்டு தாமே,
மாண்புடன் பெயரு மிட்டார்!
தேரிய அறிவின் பெருமை,
தீதுற்று அழியக் கண்டோம்!
ஆரியப் பெருமை யென்றே,
அவரும்தான் புனைந்து ரைக்க,
நேரிய பெருமை மறந்து,
நெடுவாசல் அழிக்க முனைந்தோம்!

இயற்கையே வாழ்வு என்று,
எழுதிய தமிழன் தானே,
செயற்கை புனைகள் தன்னில்,
சிந்தையை அழித்துக் கொண்டான்!
மயக்குறு குழப்பத் தாலே,
மருவுற்று சிதைந்தான் தாமே!
முயன்றநல் அறிவைக் கொண்டு,
முகிழ்ந்திடும் பொருளை உணர்ந்தான்!

தீதறு அறிவால் தானே,
தேவைக்கு இறையைப் படைத்தான்!
போதிய அறிவில் வாழ்ந்த,
பொலிவான மனிதர் எங்கே?
ஆதியாய் பகலவன் போற்றும்,
அறுவடைத் திருநாள் இன்று!
மீதியாய் முட்புதர் களுடன்,
மேவிய வயல்வெளி இங்கு!

மேழியின் செல்வம் எங்கே?
மேவிய மரபு எங்கே?
ஆழிசூழ் உலகம் தன்னில்,
அறிவுடன் வாழ்ந்தவன் எங்கே?
வாழிய தமிழர் என்றே;
வகையின்றி சொல்லா திருப்பீர்!
நாழிகைப் பொழுதே யேனும்,
நலமுடன் தமிழராய் வாழ்வீர்!

புதுமைகள் செய்ய வேண்டாம்;
பெருமைகள் தேட வேண்டாம்!
பதுமையாய் நின்றி ராமல்,
பாங்குடன் அறிவைச் செய்வீர்!
முதுபெரும் மரபும் காத்து,
முனைப்புடன் வாழ்வீர் நாளும்!
இதுதான் சிறப்பு என்று,
யாவருக்கும் வாழ்த்து சொன்னேன்!

**அனைவருக்கும்**
**இனிய பொங்கல் வாழ்த்துக்கள்!**

# பொங்கல் வாழ்த்து (13-01-2019)

பொங்கல் என்பது புதுமையும் அல்ல!
புத்தாண்டு என்பது நிலையும் அல்ல!
சங்கம் கண்ட அறிவின் மேலோன்,
சாற்றுமோர் நன்றி நாளிதுவே!

பங்கமில் வாழ்வியல் கண்ட மரபினன்;
படைத்தான் இறையையும் அவனே!
எங்கும் நிறைந்த இயற்கையினூடே,
இயன்நிலை வாழ்வைக் கண்டானே!

தங்கும் பெருமை நிலைத்திடவே,
தரணியில் பெருமை காத்திடவே,
பொங்கல் செய்து கதிரவனை;
பூசித்து தானே மகிழ்ந்திடுவீர்!

தங்கள் வாழ்வியல் செழித்திடவே;
தந்தன ஆவினங்கள் என்றானே!
பொங்கிடும் புராணீகர் சூழ்ச்சிதமை;
புறத்தே தள்ளி வாழ்ந்திவீர்!

**அனைவருக்கும்**
**இனிய பொங்கல் வாழ்த்துக்கள்!**